# பிரம்ம புராணம்

(விசாரம்)



ப்ரக்ருன்


# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பிரம்ம புராணம்** |
| ஆசிரியர் | : | **ப்ரக்ஞன்** |
| வெளியீடு | : | **பராபரம்** |
| வகை | : | **விழிப்புணர்வு** |
| முதற்பதிப்பு | : | **2024** |
| பக்கங்கள் | : | **50** |
| விலை | : | **அக விழிப்பு** |
| கணினி அச்சு | : | **ஓம் கிராபிக்ஸ்** |

# பிரம்ம புராணம்

**(விசாரம்)**

**பிரக்ஞுன்**



तल्लोकपद्मं स उ एव विष्णुः प्रावीविशत्सर्वगुणावभासम् ।
तस्मिन्स्वयं वेदमयो विधाता स्वयम्भुवं यं स्म वदन्ति सोऽभूत् ॥ (भा० ३।८।१५)

# முகவுரை

படைப்பு உண்டாகுவதற்கு முன்பாக, இருப்பு மற்றும் இல்லாமை எனும், இரண்டுமற்ற காலம் ஒன்று இருந்தது எனும்போது, இந்த பிரபஞ்சம் என்பது விசாரணைக்கு உட்பட்ட விசயமாகப் பார்க்கப்படுவதால், இந்த நூல் அதற்கான ஒரு ஆராய்ச்சி நூலாகப் பார்க்கப்படுகின்றது.

காரணத்தில் இருந்துதான் காரியம் வந்தது எனும்போது, காரியத்தின் கண்களுக்குத் தெரிகின்ற ஸ்தூலத் தன்மையின் தோற்றுவாய் கண்களுக்குப் புலப்படாத மிக நுண்ணிய சூக்குமத்தில் இருந்துதான் உண்டாகியிருக்க வேண்டும் என்ற நிலையில், அந்த ஸ்தூல படைப்புகள் எல்லாம், மீண்டும் தன் மூலத்திற்கு சூக்குமத்திற்குத்தான் திரும்பியாக வேண்டும்.

இதிலிருந்து, படைப்பு என்ற ஒன்று இருந்தால், அது அழிவு எனும் அடிப்படையில் தன் மூலத்திற்குத் திரும்புவதே ஆகும். அவ்வாறு, படைப்பிற்கும், அழிவிற்கும் இடையில் வருகின்ற இருப்பு எனும் தன்மையில், அதன் அதிர்ஷ்டானம் **“அறிவு”** என்று அறியும்போது மட்டும்தான் படைக்கப்

பட்டவைகளிலேயே மிகச்சிறந்த படைப்பாக இந்த மனிதப் பிறவி அமைந்துள்ளது.

இவ்வாறு, அனைத்து படைப்புகளுக்கும் எது ஆதாரமாக இருந்ததோ, அதுவே அந்த அறிவு என்பதினால், அது தன்னுடைய அறிவுப் பரிணாமத்தில் படிப்படியாக முன்னேறி இறுதியாக நிறைநிலை மனிதனில்தான் அது நிறைவடந்தது.

அதேசமயம், அந்த நிறை நிலை மனிதானக பரிணமித்த அதன் தோற்றுவாய் என்பது, ஒன்றுமற்ற சூன்யத்தில் இருந்து தோன்றி இருக்க முடியாது. அது எல்லாம் அறிந்த அறிவிடம் இருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் எனும் நம்முடைய சனாதன தர்மத்தின் அசைக்க முடியாத ஒரு அடிப்படை அம்சமாகவும் பார்க்கப்படுகின்றது.

ஆக, ஆரம்பத்தில் ஒடுங்கியிருந்த அந்த அறிவு தன்னை அறிந்துக் கொண்ட நிலையில், அது முற்றிலுமாக விரிந்து நிற்கிறது.

அந்த அறிவை தன்னுள் உணரும் உயரியப் பிறவியாக மனிதப் பிறவியின் மகத்துவம் அறியவும், மனிதன் புனிதனாக மாறக்கூடிய புரிதலை, இன்னும் மேம்படுத்தவும் இந்த நூல் உதவுகின்றது.

அதிலே, இந்த நூலுக்கு கொடுக்கப்பட்ட பெயரானது **'பிரம்ம புராணம்'** என்பதிலிருந்து, ஒன்றேயான அந்த அறிவை அறியக்கூடிய அதன் பழமையான புராதனத் தன்மைப் பற்றியும், என்றும் அழியாத ஒன்றேயாகிய அந்த இருப்பின் நிலையான தன்மையை, நீண்ட பரிணாமத்தின் வாயிலாக இறுதியில் அது நிறை நிலை மனிதனில் நிறைவாவதைப் பற்றியும் கூறக்கூடிய ஒரு புராணமாக இருப்பதினால், இந்தப் பெயரின் பெருமை விளங்கும்.

நன்றி

என்றும் அன்புடன்,

**பிரக்ஞன்.**

# பிரம்ம புராணம்

புராணம் என்கிற சொல்லானது பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் உள்ளது எனும் அர்த்தத்தில் வருகின்றது. புராதனம் என்ற சொல் புராணம் என்று வந்ததாகவும் வைத்துக் கொள்ளலாம். நெடுங்காலமாக, தேவர்களாலும், முனிவர்களாலும் முதன் முதலாக செவி வழியாகவே கற்பிக்கப்பட்டுவந்த புராணங்கள் **வேதவியாசரால்** நூல்களாக தொகுப்பட்டுள்ளன.

இவற்றில் வேதவியாசரே தொகுத்த பதினெட்டு புராணங்கள் மகாபுராணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவையல்லாத உபபுராணங்கள் பதினெட்டும் புராணங்க ளாகக் கொள்ளப்படுகின்றன.

புராணங்கள் என்பவை பண்டைய இலக்கியங்கள் ஆகும். அவை மகா புராணங்கள் 18, உப புராணங்கள் 18.

புராணம் என்பது சுருக்கமாக உள்ள வேதங்களை தெளிவாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறுவதே ஆகும்.

இம்மாதிரி வேதத்தில் ஒற்றை வரியில் சொல்லப்பட்ட ஒரு விசயத்தை, சுவாரஸ்யமான கதையாக விரிவாகச் சொன்னால் நன்றாக மனசில் பதியும் என்பதற்காக, மகான்களால் இவ்வாறு கதைகள் வடிவில் மாற்றப்பட்டது.

உதாரணமாக, **ஸத்யம் வத தர்மம் சர** (உண்மையே பேசு), (அறத்தைப் பின்பற்று) என்று வேதம் சொல்கிறது. அப்படி உண்மை மட்டுமே பேசுவதால் எத்தனை பெருமை ஏற்படுகிறது என்பதை ஹரிச்சந்திரன் கதை பல அத்யாயங்களில் நமக்கு விரிவாக விளக்கப்படுகின்றது. தர்மத்தைப் பற்றி மஹாபாரதத்தில் தர்மபுத்திரரின் கதையாகச் சொல்லியிருக்கிறது. அவ்வாறே, **மாத்ரு தேவோ பவ. பித்ரு தேவோ பவ** எனும் வாக்குக்கு ஶ்ரீராம சரித்ரம் உள்ளது.

மகா புராணங்களில் முதலில் தோன்றியது பிரம்ம புராணம் என்பதினால், இதனை **ஆதிபுராணம்** என்றும் கூறுவர்.

இது 10,000 ஸ்லோகங்கள் கொண்டது.

இந்த புராண லக்ஷணங்கள் ஐந்து உள்ளன

அவைகள்,

1. இந்தப் பேரண்டப் படைப்பு,
2. பிரளயம் மூலம் உலக அழிவும், மறுபடி தோற்றமும்
3. வெவ்வேறு மன்வந்தரங்கள்
4. சூரிய வம்ச, சந்திர வம்ச வரலாறு
5. அரச பரம்பரைகள் சரிதம்.

இந்த ஐந்தும் பிரம்மபுராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக எல்லாப் புராணங்களும் அரி, அரன், அயன் என்ற மும்மூர்த்திகளைப் பற்றி கூறினும் சிவபுராணங்களில் சிவனை உயர்த்தியும், சிலவற்றில் விஷ்ணுவை உயர்த்தியும் பேசப்பட்டுள்ளன.

பிரம்ம புராணம் ஒரு ராஜசிக புராணம்.

புராணங்களை தொகுத்தவர் வேதவியாசர் ஆவார்.

# படைப்பு

மனிதனைச் சுற்றிக் காணும் இந்த மொத்த உலகமே அழகு ததும்பித் திளைக்கிறது. மனிதன் உலகில் தோன்றிய காலம் முதற்கொண்டே இந்த இயற்கையில் பேரழகை அனுதினமும் அனுபவித்து வருகிறான். மலைகள், கடலை நோக்கி அடித்துப் புரண்டோடும் பெரிய ஆறுகள், திக்குத் தெரியாமல் பரந்து கிடக்கின்ற பாலைவனங்கள், விரிந்த பெருங்கடல், விண்மீன்கள் காணப்படுகின்ற வானம் என எல்லாமே எழில் மிக்கவைகள், மிகவும் நுட்பமானவைகள்.

ஆம், அவைகள் எல்லாமே நுட்பானவையாக பயபக்தியை ஊட்டுபவையாக உள்ளன.

இயற்கை என்று நாம் சொல்கின்ற இந்தப் பெரும் சக்தி, நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே மனித மனத்தின்மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

அது, மனித சிந்தனையையும் வெகுவாகப் பாதித்து இருக்கிறது. அந்தவகையிலே, இவைகளெல்லாம் என்ன?

இவைகள் எங்கிருந்து வந்தன? என்ற அந்தப் பாதிப்பினால் எழுந்ததுதான் இந்தக் கேள்விகள் ஆகும்.

மனிதன் படைத்தவற்றுள் மிகமிகப் பழமையான வேதங்களில்கூட இதே கேள்விகள் எழுவதைக் காணலாம்.

இது எங்கிருந்து வந்தது?

**இருப்பு, இல்லாமை** எதுவுமே இன்றி இருள் இருளில் மறைந்திருந்தபோது, இந்தப் பிரபஞ்சத்தை யார் படைத்தது? எப்படிப் படைத்தார்கள்? இந்த ரகசியம் யாருக்குத் தெரியும்?

இந்தக் கேள்விகள் இன்றும் நம்மிடையே கேட்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்குப் பலகோடி முயற்சிகள் நடந்திருக்கின்றன. இன்னும் பலகோடி முயற்சிகள் நடந்துகொண்டேயிருக்கும்.

இந்தக் கேள்விக்கு அளிக்கப்பட்ட ஒவ்வொரு பதிலும் உண்மையின் ஒருபகுதி இருந்தது. காலம் செல்லச்செல்ல இந்த உண்மை உறுதிப்பட்டுக்கொண்டே வருகிறது.

இந்தியாவின் புராதனமான தத்துவ ஞானிகள் இந்தக் கேள்விக்கு அளித்த பதிலைத் தற்கால அறிவுடன் இணைத்து உங்கள் முன் வைக்க முயல்கிறேன்.

நைமிசாரணியத்தில் சனகாதி முனிவர்களுக்கு சூதமுனிவர் பிரம்ம புராணத்தைப் பற்றிக் கூறலானார். (வியாசரின் சீடன் ரோமஹர்ஷணர் கூறியதாகவும் கூறப்படும்) எங்கும் நீர் சூழ்ந்திருக்க, பிரம்மனாகிய **பகவான் விஷ்ணு** யோகதுயில் கொண்டிருந்தார்.

நீருக்கு **நர** என்றும், அயன என்றால், **படுக்கை** என்றும் பொருள். ஆக, நீரில் படுத்துக் கொண்டிருப்பவர் நாராயணன் என்பதாக அறிய வேண்டும்.

அந்த நீரில் படுத்துக் கொண்டிருந்த நாராயணனின் மூலம் ஓர் அண்டம் (முட்டை) வெளித்தோன்றியது. அதனுள் பிரம்மா இருந்தார். அவரே ஹிரண்யகர்பன் ஆவார்.

ஹிரண்யகர்பன் அல்லது பேரண்ட புருஷன் (हिरण्यगर्भ) என்பது, வேதாந்த சாஸ்திர நூல்களில், சூக்கும நிலையிலுள்ள, படைப்பிற்கு முற்பட்ட உலகமானது, ஒளிர்ந்து கொண்டிருக்கும் தங்க முட்டைக்கு உவமையாக காட்டப்படுகிறது.

ஹிரண்ய – **தங்கம்.**

கர்பன் – **கரு** (முட்டை)

பிரபஞ்சத்தை தன்னுடைய கர்ப்பத்தில் வைத்துக் கொண்டு, படைப்புத் தொழிலைச் செய்யும் பிரஜாபதியான நான்முகன் எனும் பிரம்மாவே **ஹிரண்யகர்பன்** ஆவார்.

சுவேதாஸ்வர உபநிஷத்தில் உள்ள ஒரு மந்திரத்திற்கு பகவான் ஸ்ரீ ஆதிசங்கரர் எழுதியுள்ள விளக்க உரையில் *"இதமானதும், ஆனந்தத்தை ஏற்படுத்துவதும், மிகவும் ஒளிர்வதுமான ஞானமானது யாரிடம் முழுமையாகவும், செறிவாகவும் உள்ளதோ அத்தகையவனே ஹிரண்யகர்பன் ஆவான்"* என விளக்கியுள்ளார்.

எனவே ஹிரண்யகர்பன் உலகைப் படைப்பவனும் மற்றும் ஞானவடிவினனும் ஆவான். ஞானத்துடன் இச்சையும் (ஆசையும்) இருப்பதால், அவன் இச்சாசக்தி வடிவினனாகவும் இருக்கிறான்.

உலகத்தை படைக்கும்பொழுது அவனுடைய கிரியா சக்தியானது முதன்மையாகக் காணப்படுவதால், அவன், பிராணன் (பிராண சக்தி) ஆகவும் இருக்கிறான்.

ஹிரண்யகர்பன், இச்சா சக்தி, கிரியா சக்தி மற்றும் ஞான சக்திகளுடன், ஐந்து கோசங்களுல் மூன்று கோசங்களான விஞ்ஞானமய கோசம், மனோமய கோசம் மற்றும் பிராணமய கோசங்களை உபாதியாக பெற்றுள்ளது.

அவர் முட்டையின் இரு பகுதியிலிருந்து சுவர்க்கத் தையும், பூமியையும் ஆக்கினார். அவ்விரண்டிலும் ஆகாயம், திக்குகள், காலம், மொழி, உணர்வுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

பிரம்மாவின் மனதிலிருந்து மரீசி, அத்திரி, ஆங்கிரசர், புலஸ்தியர், புலஹர், கிரது, வசிஷ்டர் என்ற சப்தரிஷிகளைத் தோற்றுவித்தார்.

பின்னர் ருத்திரனையும், சனத் குமாரரையும் தோற்று வித்தார்.

அதன்பிறகு, பிரம்மா ஆணையும், பெண்ணையும் படைத்து, அவர்கள் மூலம் மக்கள் பெருக்கத்துக்கு வித்திட்டார். ஆணின் பெயர் சுவயம்புமனு. பெண்ணின் பெயர் சதரூபை. இவர்களின் புத்திரன்தான் **மனு.**

மனுவிலிருந்து வளர்ந்த மக்கள் மானிடர் (அ) மானவர் எனப்பட்டனர். அத்தம்பதியருக்கு வீரவீன், பிரியவிரதன், உத்தானபாதன் என்று மூவர் பிறந்தனர்.

உத்தானபாதனின் மகன் துருவன், துருவ நக்ஷத்திரமாக விளங்குகிறார். துருவன் பரம்பரையில் தோன்றிய பிராசீனபர்ஹிக்கு பிரசேதனர்கள் எனப்படும் பத்துபேர் பிறந்தனர்.

அவர்களுக்கு உலக வாழ்க்கையில் விருப்பமின்றித் தவம் செய்யப் புறப்பட்டனர். உலகைப் பராமரிக்க ஆள் இல்லாததால் எங்கும் காடுகள் பெருகி விட்டன. பிரசேதனர்கள் கோபம் கொண்டு வாயுவையும், அக்கினியையும் தோற்று வித்துக் காடுகளை அழித்தனர்.

அப்போது சோமன், ஒர் அழகிய பெண் மரீஷையுடன் பிரசேதனர்களை அணுகி, அவர்கள் கோபத்தை சாந்தமாக்கி மரீஷையை மனம் செய்வித்தார். அவர்களுடைய மகனே தக்ஷபிரஜாபதி.

# தக்ஷன் சந்ததி

தக்ஷனுடைய ஆயிரம் புத்திரர்களை நாரதர் அறவுரை கூறி தவம் செய்ய அனுப்பிவிட்டார். மறுபடியும் தோன்றிய ஆயிரம் பேர்களையும் அவ்வாறே அனுப்பி விட்டார். இவர்கள் ஹர்யக்ஷ்வர்கள், ஷவலஷ்வர்கள் என்பவர்கள் ஆவர்.

தக்ஷனுக்குப் பிறந்த அறுபது பெண்களில் பத்த பேரைத் தருமனுக்கும், பதின்மூன்று பேரை காசியப முனிவருக்கும், இருபத்தேழு பெண்களை சோமன் எனும் சந்திரனுக்கும், மீதிப் பெண்களை அரிஷ்டநேமி, வாஹுபுத்திரர், ஆங்கீஸர், கிரிஷஷ்வர் ஆகியோருக்கும் மணம் செய்வித்தான்.

தர்மனுக்கு மணம் செய்வித்த பத்து புத்திரிகளில் அருந்ததியின் மக்கள் உலகிற்கு விஷயமானவர்கள். வாசுவின் மக்கள் வசுக்கள் என்பர்.

அவர்களில் அனலனின் மகன் குமரன். கிருத்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்ட குமரன் கார்த்திகேயன் எனப்பட்டான். பிரபசாவின் மகன் விசுவகர்மா; தேவலோக சிற்பி. சாத்யாவின் மக்கள் சாத்திய தேவர்கள்.

விஸ்வாவின் மக்கள் விச்வதேவர்கள். சந்திரன் மனைவிகள் 27 பெண்கள், நக்ஷத்திரங்கள். காசியபரின் மனைவியரில் அதிதியின் மக்கள் ஆதித்தியர்கள் ஆவர்.

திதி மக்கள் தைத்தியர்கள். ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு அவள் புத்திரர்கள்.

தனுவின் புத்திரர்கள் தானவர்கள். அவர்கள் வம்சத்தில் பௌலமர்கள், காலகேயர்கள் தோன்றினர்.

அரிஷ்டாவின் புத்திரர்கள் கந்தர்வர்கள். காசாவின் மக்கள் யக்ஷர்கள். சுரபிக்கு பசுக்கள், எருமைகள் தோன்றின. வினிதாவுக்கு அருணன், கருடன் மக்கள். தாம்ராவின் ஆறு பெண்களுக்கு ஆந்தைகள், கழுகுகள், ராஜாளிகள், காக்கைகள், நீர்ப்பறவைகள் குதிரைகள், ஒட்டகங்கள், கழுதைகள் தோன்றின.

குரோதவஷையின் ஆயிரக்கணக்கான மக்கள் நாகர்கள்.

இளைக்கு மரம், கொடி, புதர் போன்றவை தோன்றின. கத்ருவின் மக்களாகிய நாகர்களில் அனந்தன், வாசுகி, தக்ஷகன், நஹுஷன் ஆகியோர் முக்கியமானவர். முனிக்கு

அப்ரஸுகள் தோன்றினர். திதி, காசியபரிடம் இந்திரனை வெல்லக்கூடிய ஒரு மகனை அருள வேண்டினாள்.

குழந்தை கருவுற்ற நாளிலிருந்து நியம நிஷ்டைகளுடன் இருக்க வேண்டும் என்று காசியபர் கூறினார். அதற்குப் பங்கம் ஏற்பட்டால் நினைத்தது நிறைவேறாது என்றார்.

கருவுற்ற திதி ஒருநாள் கால்களைக் கழுவாமல் தூங்கச் செல்ல, இந்திரன் அணு அளவில் அவளது கருவறையுள் நுழைந்து கருவை வஜ்ராயுதத்தால் ஏழு பகுதிகளாக ஆக்கிவிட்டான்.

கரு என்பவள் அழ ஆரம்பிக்கவே, இந்திரன், **மா ருத** என்று சமஸ்கிருத மொழியிலே கூறினார். அதாவது (அழாதே) என்று கூற அவை **மருத்துக்கள்** எனப்பட்டன.

திதிக்கு விரத பங்கம் ஏற்பட அவள் எண்ணம் ஈடேறவில்லை. மாறாக, அக்குழந்தைகள் அதாவது மருத்துக்கள் இந்திரனுக்கு உதவியாளராயினர்.

ரிக் வேத மண்டலம் ஆறில், மந்திரம் 66 – இல் மழை, பெருங்காற்று, சூறாவளியுடன் கூடிய தேவர்கள், மருத்துக்கள் என கூறுகிறது.

இவகளெல்லாம் படைப்பின் பஞ்சபூத தத்துவங்களை விளக்க வருவதாகத்தான் உள்ளது.

அதாவது, சூக்கும பஞ்ச பூதங்களில் இருந்து, ஸ்தூல பஞ்ச பூதங்கள் உண்டாகும் **பஞ்சீகரணம்** முறை ஆகும்.

(சிருஷ்டியைப் பற்றி எல்லாப் புராணங்களும் கூறும் செய்திகள் ஒன்றே போலவே காணப்படுகின்றன.)

இருப்பு, இல்லாமை இரண்டுமற்ற காலம் ஒன்று இருந்தது என்பது முதல் அம்சம்.

அப்போது இந்த உலகம் இருக்கவில்லை.

கடல்கள், சமுத்திரங்கள், ஆறுகள், மலைகள், நகரங்கள், கிராமங்கள், மனிதர்கள், மிருகங்கள், செடிகொடிகள், பறவைகள் இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கிய நமது அன்னை பூமி, கிரகங்கள், நட்சத்திர மண்டலங்கள், மற்றும்

படைப்பின் எல்லையற்ற பல விசித்திரங்கள் எவையுமே அப்போது இருக்கவில்லை.

இது நமக்கு நிச்சயமாகத் தெரியுமா?

இந்த முடிவு எப்படி வந்தது என்பதை ஆராய முயல்வோம்.

ஒரு மனிதன் தன்னைச் சுற்றிக் காண்பது என்ன?

ஒரு சிறிய செடியை எடுத்துக் கொள்வோம்.

மனிதன் ஒரு விதையைப் பூமியில் நட்டுத் தண்ணீர் விடுகிறான். சிறிது காலம் கழித்து, ஒரு சிறிய செடி துளிவிட்டு, பூமியிலிருந்து தலை நீட்டி, வளர்ந்து, பெரிய மரமாகிறது. பிறகு விதையை விட்டுவிட்டு அது அழிகிறது.

விதையிலிருந்து முளைத்து, மரமாகி, மறுபடியும் விதையாகி, இப்படி ஒரு சுழற்சியை அது நிறைவு செய்கிறது.

ஒரு பறவையைப் பார்த்தால், அது முட்டையிலிருந்து பிறந்து, வளர்ந்து, எதிர்காலப் பறவைகளை உண்டாக்கும் விதைகளான முட்டைகளை இட்டுவிட்டு இறக்கிறது.

மிருகங்கள், மனிதர்கள், ஆகிய அனைவரின் விஷயமும் இப்படித்தான்.

இயற்கையிலுள்ள எல்லாமே சில விதைகள், சில மூலப்பொருட்கள், சில நுட்பமான உருவங்கள் இவற்றி லிருந்துதான் ஆரம்பிக்கின்றன.

சிறிது சிறிதாகப் பருத்தன்மை அடைந்து, வளர்ந்து, சிலகாலம் அப்படியே தொடர்ந்து, பின்னர் மறுபடியும் பழைய நுட்பமான ஆரம்ப நிலையை அடைந்து, அடங்கிவிடுகின்றன.

சூரிய கிரணங்கள் புகுந்து விளையாடும் மழைத்துளி, கடலிலிருந்து நீராவியாகி காற்றில் வெகுதூரம் மேலே போய், மறுபடியும் நீராக மாறி, பூமிக்கு மறைத்துளியாக வருகிறது.

மறுபடியும் இதே சுழற்சி தொடர்கிறது.

நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கையில் உள்ள எல்லாமே இந்தச் சுழற்சிக்குக் கட்டுப்பட்டவையே.

பெரிய மலைகளைப் பனிப்பாறைகளும் ஆறுகளும் அரித்து, மெதுவாக ஆனால் நிச்சயமாக அவற்றை மணல் துகள்களாக மாற்றுகின்றன. இந்தத் துகள்கள் கடலுக்கு

அடித்துச் செல்லப்பட்டு, கடல் படுகையில் அடுக்கடுக்காக ஒன்றன்மேல் ஒன்றாகப் படிகின்றன. காலப்போக்கில் இறுகிப் பாறைகளாகி, எதிர்காலத்தில் மலைகளாக எழுகின்றன.

இந்தச் சுழற்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

மணலிலிருந்து மலை தோன்றுகிறது. மலை மறுபடியும் மணலாகிறது.

இயற்கையின் இயக்கம் எங்கும் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது.

இதுவரை மனித அனுபவத்தில் இதற்கு மாறான கருத்து எழுந்ததில்லை என்பதும், ஒரு மணல்துகள்கள் உண்டாகும் அதே முறையில்தான் பிரம்மாண்டமான சூரியர்களும், நட்சத்திரங்களும் இந்தப் பிரபஞ்சத்தில் உண்டாகின்றன என்பதும், ஓர் அணு எப்படி அமைக்கப் பட்டிருக்கிறதோ? அதே முறையில்தான் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதும், பிரபஞ்சம் முழுவதிலும் ஒரே விதிதான் நிலவுகிறது என்பதும் உண்மை யானால், ஒரு பிடி மண்ணை அறிந்துக் கொள்வதன் மூலம், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா மண்ணின் இயல்பையும் நாம்

அறிந்துகொள்ள முடியும் என்று வேதங்கள் கூறுவது சரியானதே ஆகும்.

ஒரு சிறிய செடியின் வாழ்க்கையை நாம் அறிந்துக் கொண்டால், இந்தப் பிரபஞ்சத்தை, அது உள்ளபடியே நாம் அறிய முடியும்.

ஒரு சிறு மணல்துகளின் இயல்பை நாம் அறிந்துக் கொண்டால், இந்தப் பிரபஞ்சத்தின் ரகசியம் முழுவதையும் நாம் புரிந்து கொள்வோம்.

இதே தர்க்கத்தை இயற்கை நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் பொருத்திப் பார்த்தால், எல்லாவற்றிற்கும் ஆரம்பமும், முடிவும் ஒரேமாதிரி இருப்பதைக் காணலாம்.

மலை, மணலிலிருந்து தோன்றி மறுபடியும் மணலாக மாறுகிறது. ஆறு, நீராவியிலிருந்து தோன்றி மீண்டும் நீராவியாக மாறுகிறது. தாவரம் விதையிலிருந்து தோன்றி விதையிலேயே முடிகிறது.

மனித உயிர், மனித உயிரணுக்களிலிருந்து தோன்றி மனித உயிரணுக்களாக முடிகிறது.

ஆறுகளும் நட்சத்திரங்களும் கிரகங்களும் நிறைந்த இந்தப்பிரபஞ்சம், முகிற்படல நிலையிலிருந்து தோன்றி யிருக்கிறது. மறுபடியும் அதே நிலையைத்தான் அது அடைய வேண்டும்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன?

நுண்நிலை **காரணம்**. அதன் தூலநிலை **காரியம்** என்பதுதான்.

அழிவு என்றால், காரண நிலையை அடைவதே என்பதை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தத்துவ சாஸ்திரங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

இதோ, இப்போது இங்கே இருக்கும் ஒரு மேஜையை உடைத்து, அழித்துவிட்டால், அது, நாம் மேஜை என்று சொல்லும் இந்த உருவத்தை அமைப்பதற்குக் காரணமாக இருந்த அதன் நுட்பமான துகள்களாகிய காரணநிலையை அடைந்துவிடுகிறது.

மனிதன் இறக்கும்போது, அவனது உடலை உருவாக்கக் காரணமாக இருந்த மூலங்களின் நிலையை அடைகிறான்.

அதாவது, அதற்கு உருவம் அளித்த மூலகாரணத்தை அடைந்து விடுகிறது. ஆக, மூலக் காரணநிலையை அடைவதையே நாம் **அழிவு** என்கிறோம்.

ஆகவே, காரணமும், காரியமும் ஒன்றே. வேறுபட்ட வைகள் அல்ல! என்பது தெரிகிறது.

இரண்டும் உருவத்தில்தான் வேறுபடுகின்றன.

அதாவது, மண் காரணம், பானை ஒரு காரியம். பானைக்கு ஒரு மூலகாரணம் இருக்கிறது. அதுதான் மண் என்பதினால், பானை என்ற உருவத்தில் அந்தக் காரணம் ஒழிந்துக் கொண்டுள்ளது. மேலும், மண் தானாகவே, பானையாக மாறிவிடாது. அந்த மண்ணைக் கொண்டு, பானையை உருவாக்க ஒரு குயவன் இருக்க வேண்டும். ஆகவே, ஒரு காரணத்தில் இருந்து ஒரு காரியம் உருவாக வேண்டுமானால், அங்கே ஒரு அறிவு இருந்தாக வேண்டும்.

பானையின் மூலப்பொருள் ஒரு சிறிதளவும், அதற்கு உருவமளித்தவரின் அறிவும், அதற்கான மூல காரணங்கள்.

அதாவது, உபாதான மற்றும் நிமித்த காரணங்கள்.

இந்தக் காரணங்கள் இரண்டும் சேர்ந்து, பானை என்று நாம் சொல்கின்ற இந்த உருவத்தைப் படைத்திருக்கின்றன.

பானை செய்தவரிடம் இருக்கின்ற அறிவு சக்தியே, மூலப்பொருளின் துகள்கள், தூள் தூளாகப் பிரிந்து விழாமல், ஒன்றாக இணைக்கும் ஒரு சக்தியாக பானையில் இருக்கிறது.

மேலும், அந்த மூலப்பொருளிலும் அதே பானை இருக்கிறது. ஆக, மூலக்காரணங்களின் புது புது உருவமே பானை என்னும் வெளிப்பாடு.

இந்தப் பானை தூள்தூளாக உடைந்துவிட்டால், இணைப்புச் சக்தி அதனுடைய பிறப்பிடமான மூலப் பொருளுக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

அதாவது, அவ்வாறு உள்ள மண் துகள்களோ, புதிய உருவம் எடுக்கும்வரை அப்படியே இருக்கும்.

ஆகவே, காரணம் காரியத்திலிருந்து வேறு படுவதில்லை என்பதைக் காண்கிறோம். அதாவது, காரணம் என்பது, தன்னுடைய நுண்ணிய நிலையில் இருந்து, இன்னும் அதிகமான பருமன் தன்மைக் கொண்ட தூலத் தன்மை அடைவதே காரியமாகும்.

மேலும், தாவரங்கள், மிருகங்கள், மனிதர்கள் என்று நாம் அழைக்கின்ற உருவங்கள் எல்லாமே முடிவில்லாமல் எழுவதும், விழுவதுமாகச் சுழன்று கொண்டிருப்பதை அறிகிறோம்.

விதை மரத்தை உண்டாக்குகிறது. மரம் விதையை உண்டாக்குகிறது. இப்படியே மாறிமாறி நடந்து கொண்டி ருக்கிறது. இதற்கு முடிவே இல்லை.

நீர்த்துளிகள், அருவிகளாக மலைகளிலிருந்து இறங்கி ஓடி, கடலில் கலக்கின்றன. அங்கிருந்து நீராவியாக மேலே போய், மறுபடியும் மழையாக மலை உச்சியில் பொழிகின்றன. அந்த மழை நீர் மீண்டும் அருவியாக வருகின்றது. இதுவும் மாறிமாறி நடந்து வருகிறது.

இப்படி எழுவதும் விழுவதுமாக இந்தச் சுழற்சி நடந்துக்கொண்டே இருக்கிறது.

பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாமே இப்படித்தான் நடைபெறுகின்றன.

நம்மால் காணமுடிந்த, உணரமுடிந்த, கேட்கமுடிந்த, கற்பனை செய்யமுடிந்த என்று, நம் அறிவுக்கு உட்பட்ட எல்லாமே இப்படித்தான் நடைபெறுகின்றன.

இது, மனிதர்கள் மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுவது போலிருக்கிறது.

படைக்கப்பட்ட எல்லாமே இப்படித்தான் சுழன்று கொண்டிருக்கின்றன.

அலைகள் எழுகிறது, விழுகிறது.

இவ்வாறே எல்லா செயல்களும் நடைபெறுகின்றன.

ஒவ்வோர் உயர்வுக்கும் ஒவ்வொரு தாழ்வும், ஒவ்வோர் தாழ்வுக்கும் ஒவ்வொரு உயர்வும் உண்டு.

பிரபஞ்சம் ஒரே திட்டத்தில் நடைபெறுவதால், இதே விதி பிரபஞ்சத்திலுள்ள எல்லாவற்றிற்கும் பொருந்த வேண்டும்.

ஆக, இந்தப் பிரபஞ்சத்தை அதனுடைய காரணங் களாகப் பிரிக்க வேண்டும்.

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பூமி, உடல், மனம் மற்றும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாமே மறைந்து, அழிந்ததுப் போக வேண்டுமானால், தங்கள் நுட்பமான மூல காரணநிலையை அடைய வேண்டும்.

ஆனால், அவைகள் மூல காரணங்களில் நுட்ப உருவத்துடன் இருக்கவே செய்யும்.

இந்த நுட்ப உருவங்களிலிருந்து மறுபடியும் அவை, புதிய பூமிகள், சூரிய சந்திரர்கள், மற்றும் நட்சத்திரங்களாகத் தோன்றுகின்றன.

இப்படி எழுவதையும் விழுவதையும் பற்றிய மற்றொரு முக்கியமான விஷயத்தைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

மரத்திலிருந்து விதை வருகிறது.

அது உடனே மரமாக மாறுவதில்லை.

அது, சில நாட்கள் இயக்கமில்லாமல் இருக்கிறது.

இதையே வேறுவிதமாகச் சொன்னால், வெளிப் படையாகத் தெரியாத ஒரு நுட்பமான இயக்கத்தில் அது ஈடுபட்டிருக்கிறது.

விதை மண்ணுக்கு அடியில் தான் சிலகாலம் இயங்க வேண்டும்.

அங்கே அது பல துண்டுகளாக உடைந்து, சிதறி, அனேகமாக உருத்தெரியாமல் அழிகிறது.

அந்த அழிவிலிருந்துதான், புத்துயிர் பெற்ற தாவரம் உற்பத்தியாகிறது.

பிரபஞ்சமும் ஆரம்பத்தில் சிலகாலம் இதேப்போல்தான் நுட்பமான உருவத்துடன் வெளியில் தெரியாமலும் வெளிப் படாமலும் இயங்க வேண்டும். அந்த நிலையிலிருந்துதான் புதிய படைப்பு தோன்றுகிறது.

பிரபஞ்சம் நுட்பமான உருவத்துடன் சிலகாலம் இருந்து, பின்னர் வெளித் தோன்றும் இந்தக் கால அளவு சமஸ்கிருதத்தில் ஒரு **கல்பம்** எனப்படுகின்றது. அதாவது, சுழற்சி என்று சொல்லப்படுகிறது.

ஆக, நுட்பமான உருவங்கள் சிறிதுசிறிதாக வளர்ச்சி யடைந்து தூலத்தன்மை பெறுகின்றன என்பதைக் காண்கிறோம்.

**காரணமும், காரியமும் ஒன்றுதான்.**

காரியம், காரணத்தின் வேறு உருவம் என்பதைக் கண்டோம்.

ஆகவே, இந்தப் பிரபஞ்சம் முழுவதும் சூன்யத்திலிருந்து வெளிவந்திருக்க முடியாது.

காரணமில்லாமல் எதுவும் தோன்ற முடியாது.

காரணம் காரியத்தின் வேறு உருவம்.

அப்படியானால், எதிலிருந்து இந்தப் பிரபஞ்சம் தோன்றியது?

அதற்கு முன்னால் இருந்த மிகவும் நுட்பமான சூக்கும பிரபஞ்சத்திலிருந்துதான் இந்த தூல பிரபஞ்சம் தோன்றியிருக்க வேண்டும்.

மனிதன் எதிலிருந்து தோன்றினான்?

ஏற்கனவே இருந்த மிகவும் நுட்பமான உயிரணு எனும் உருவத்திலிருந்துதான் தோன்றினான்.

மரம் எதிலிருந்து தோன்றியது?

விதையிலிருந்துதான்.

மரம் முழுவதுமே விதைக்குள் இருந்தது.

இப்போது அது வெளிவந்து, தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

ஆகவே, கண்களுக்குப் புலப்படாத மிகவும் நுட்பமான உருவில் இருந்த பிரபஞ்சத்திலிருந்துதான் கண்களுக்குப் புலனாகும் இந்தப் தூலப் பிரபஞ்சம் முழுவதுமே தோன்றி இருக்கிறது.

அது இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

பின்னர் தன்னுடைய நுட்பமான உருவத்திற்குத் திரும்பிச் சென்றுவிடும்.

மறுபடியும் வெளிப்படும்.

நுட்பமான உருவங்கள் வெளிப்பட்டுச் சிறிதுசிறிதாகத் தூலத் தன்மையை அடைகிறது.

தூல நிலையிலேயே வளர்ந்து அந்தத் தன்மையின் எல்லையை அடைந்தவுடன், பின்னோக்கிப் போக ஆரம்பித்து, மறுபடியும் சிறிதுசிறிதாக நுட்ப நிலையை அடைகின்றன.

நுட்ப நிலையிலிருந்து வெளிப்பட்டுத் தூலத் தன்மை அடைவதைத்தான், அதாவது, நுன்ணிய நிலையிலிருந்து, படிப்படியாக பருமை நிலையை அடையும், பகுதிகளின் அமைப்பில் மாறுபாடு ஏற்படுத்திக் கொள்வதைத்தான் **பரிணாமம்** என்று சொல்கிறோம்.

இதுதான் உண்மை, இதுவே நிச்சயமான உண்மை.

நம் வாழ்க்கையில் நேரடி அனுபவத்தில் இவற்றை யெல்லாம் காண்கிறோம்.

பகுத்தறிவுள்ள யாரும் பரிணாமத் தத்துவவாதிகளுடன் வாதிட முடியாது.

ஆனால், நாம் இன்னும் ஒரு விஷயத்தைத் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

இன்னும் ஒரு படி மேலே போக வேண்டும்.

அது என்ன ?

ஒவ்வொரு விரிவுக்கும் முன்னால், ஓர் ஒடுக்கம் உண்டு என்பதுதான் அது.

விதைதான் மரத்திற்குத் தாய்.

அந்த விதைக்கு இன்னொரு மரம் தாயாக இருந்திருக்கிறது.

விதை என்ற நுட்பமான உருவத்திலிருந்துதான் பெரிய மரம் வெளிவருகிறது.

ஆனால், ஏற்கனவே வேறொரு பெரிய மரம் ஒடுங்கியதால் தோன்றியதுதான் இந்த விதை.

இந்த கண்களால் காணும் விரிவான பிரபஞ்சம் முழுவதுமே, கண்களுக்குப் புலப்படாத மிகவும் நுட்பமான பிரபஞ்சத்திற்குள் ஒடுங்கியிருக்கிறது.

அதுப்போல, பின்னால் மனிதனாகப் போகின்ற ஒரு சிறிய உயிரணு, உண்மையில், ஒடுங்கிய நிலையிலுள்ள மனிதனே.

அது விரிவடைந்து முழு மனிதனாகிறது.

இதை மட்டும் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டால், பரிணாமத் தத்துவவாதிகளுக்கும் நமக்கும் இடையே கருத்து வேற்றுமை இருக்காது.

ஆகவே, சூன்யத்திலிருந்து எதுவும் தோன்ற முடியாது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம்.

எல்லாம் எப்போதும் இருந்துக் கொண்டேதான் இருக்கிறது. எப்போதும் இருந்து கொண்டேதான் இருக்கும்.

ஆனால், இயக்கம்தான் நுண்ணிய நுட்பத்திற்குச் செல்வதும், அதிலிருந்து தூலமாக வெளிப்படுவதும், மறுபடியும் நுட்பத்திற்குச் செல்வதுமாக, அலைகள் போல எழுவதும்

விழுவதுமாகத் தொடர்ந்து, நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.

இந்த ஒடுக்கமும், விரிவும் இயற்கை முழுவதிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மிகவும் சிறிய உயிர் முதல் முழுமையடைந்த மனித வெளிப்பாடுவரை எல்லா பரிணாம வளர்ச்சியுமே, வேறு ஏதோ ஒன்றின் ஒடுக்கமாகவே இருக்க வேண்டும்.

எதனுடைய ஒடுக்கம்?

எது ஒடுங்கியிருக்கிறது என்பதுதான் கேள்வி.

அது கடவுள்தான் என்ற நம் கருத்து தவறு என்று பரிணாமத் தத்துவவாதிகள் கூறுவார்கள்.

ஏன்?

ஏனெனில், கடவுள் **அறிவு** வடிவானவர் என்று நாம் சொல்கிறோம்.

ஆனால் பரிணாம வளர்ச்சியில், அறிவு மிகவும் தாமதமாக அல்லவா தோன்றுகிறது என்று பரிணாமவாதிகள் சொல்கிறார்கள்.

மனிதனிடமும், உயர்நிலையிலுள்ள மிருகங்களிடமும் தான் அறிவு காணப்படுகிறது.

எனவே, உயிர் தோன்றிப் பலகோடி வருடங்கள் கழிந்த பின்னரே, இந்த அறிவு தோன்றியிருக்கிறது என்றும் பரிணாமவாதிகள் சொல்கிறார்கள்.

நமது மெய்யறிவு கொள்கையின் முன்னால், பரிணாமவாதிகளின் இந்த ஆட்சேபம் அடிபட்டுப் போகிறது.

அதாவது, மரம் விதையிலிருந்து தோன்றி, மறுபடியும் விதைக்குள்ளேயே ஒடுங்குகிறது.

ஆரம்பமும் முடிவும் ஒன்றாகத்தான் இருக்கின்றன.

பூமி அதன் காரணத்திலிருந்து வெளிவந்து அதற்கு உள்ளேயே ஒடுங்குகிறது.

ஆரம்பம் தெரிந்தால் முடிவும் தெரிந்துவிடும் என்பது நமக்குத்தெரியும். அதேப்போல, முடிவு தெரிந்தால், ஆரம்பமும் தெரிந்துவிடும்.

இதை எவ்வாறு அறிந்துக் கொள்ளலாம் என்றால், ஒரு முனையில் முதல் உயிரணுவும், மற்றொரு முனையில் நிறைநிலை அடைந்த மனிதனும் உள்ள பரிணாம வளர்ச்சித் தொடரை எடுத்துக் கொள்ளுங்கள்.

இந்தத் தொடர் முழுவதும் ஒரே உயிர்தான் உள்ளது. ஆக, இந்த தொடரில் பரிணாம வளர்ச்சியின் முடிவில், நிறை நிலைமனிதன் இருப்பதால், தொடக்கத்திலும் நிறை நிலை மனிதன்தான் இருந்திருக்க வேண்டும்.

ஆகவே, மிக உயர்ந்த அறிவின் ஒடுக்கமே முதல் உயிரணுவாக இருக்க வேண்டும். நமக்கு அது தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் அந்த ஒடுங்கிய அறிவு சிறிது சிறிதாகத் தன்னை விரிவுபடுத்தி, கடைசியில் நிறை நிலைமனிதனாக வெளிப்படுத்துகிறது.

இதை அறிவியல் முறையில் ஆராய்ந்துப் பார்த்தாலும் தெரியும்.

அதாவது, சக்தியின் அளவு எப்போதும் மாறுவதில்லை என்ற நியதி உண்மையானால், முதலில் ஓர் எந்திரத்தில் எதையும் செலுத்தாமல், அதிலிருந்து எதையும் வெளிக்கொணர முடியாது.

நீராவி எந்திரத்திற்குள் நீராகவும், நிலக்கரியாகவும் எவ்வளவு சக்தியைச் செலுத்துகிறோமோ? அதற்கு ஈடான வேலையைத்தான் அதிலிருந்து நாம் பெற முடியுமே தவிர, சிறிதுகூட அதிகமாகவோ குறைவாகவோ பெற முடியாது.

காற்று, உணவு, மற்றும் பல பொருட்கள் மூலமாக என் உடலிற்குள் எவ்வளவு சக்தி சென்றிருக்கிறதோ? அதே அளவு வேலையைத்தான் நான் செய்ய முடியும்.

ஒரு வகைச் சக்தி, இன்னொரு வகைச் சக்தியாக மாறுதலடைந்து வெளிப்படுகிறது.

அவ்வளவுதான்.

இந்தப் பிரபஞ்சத்திற்குள் ஏற்கனவே இருக்கும் சக்திக்கு மேல் சிறிதளவு சக்தியைக்கூடச் சேர்ப்பதோ? இருக்கும் பொருளுக்கு மேல் அணுவளவு பொருளைக்கூடச் சேர்ப்பதோ முடியவே முடியாது.

அல்லது, இருக்கும் பொருளிலிருந்து அணுவளவு பொருளை எடுப்பது என்பதும்கூட முடியாத காரியம்.

அப்படியானால் இந்த அறிவு என்பது என்ன?

ஏற்கனவே அது உயிரணுவுக்குள் ஒடுங்கி இருந்திருக் காவிட்டால், திடீரென்று சூன்யத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டும்.

அது நடக்காது. அது அபத்தம்.

ஆகவே, இயற்கையின் விதிகளைக் கடந்த, எல்லாவற்றையும் கடந்த, பிறப்பு இறப்பு அற்றவனான, பரிணாம வளர்ச்சிக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லாதவனான, நிறை நிலைமனிதனான சுதந்திரனான, தெய்வ மனிதனான, முக்தன் என்றும், யோகி என்றும் அழைக்கப்படும் மனிதன், பரிணாம வளர்ச்சியாகிய சங்கிலியின் ஒரு முனையில் இருந்து, ஏற்கனே இருந்த நிறை நிலை மனிதனிடம்

இருந்துதான் அந்த மனிதன், அந்தப் பரிணாமச் சங்கிலியின் மறுமுனையிலுள்ள முதல் உயிரணுவுக்குள் ஒடுங்கி இருந்திருக்க வேண்டும்.

இதே ஆராய்ச்சியை இந்த பிரபஞ்சம் முழுவதற்கும் பொருத்திப் பார்த்தால், படைப்பிற்கு மூலகாரணமே அந்த அறிவுதான் என்பதைக் காண்கிறோம்.

இந்தப் பிரபஞ்சத்தைப்பற்றி மனிதன் கொண்டிருக்கும் மிக உயர்ந்த கருத்து என்ன?

எல்லாமே அறிவுதான் என்பதும், பிரபஞ்சத்தின் பகுதிகள் எல்லாமே ஒன்றுக்கொன்று இணைந்து செயல் படுகின்றன என்பதும்தான் ஆகும்.

பழங்காலத்தில் இந்த அறிவின் வெளிப்பாட்டை ஒழுங்கு முறைக்கொள்கையின் மூலம் விளக்குவதற்காக நம்முடைய முன்னோர்கள் முயன்றிருக்கிறார்கள்.

ஆகவே, அறிவுதான் எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக இருந்திருக்கிறது.

ஆரம்பத்தில் அந்த அறிவு ஒடுங்கியிருக்கிறது.

முடிவில் அது முற்றிலும் விரிந்து நிற்கிறது.

ஆகவே, பிரபஞ்சத்தில் வெளிப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்ற அறிவு முழுவதுமே, பிரபஞ்சத்தோற்றத் திற்குக் காரணமான முதல்கருவில் அடங்கியிருந்த மூல அறிவின் விரிவே ஆகும்.

பிரபஞ்சம் முழுவதும் பரவி நிற்கும் இந்த அறிவைத்தான் **பிரஹ்மம்** என்கிறோம்.

வேறு எந்தப் பெயரால் வேண்டுமானாலும் அழையுங்கள். ஆரம்பத்தில் இருந்தது இந்த எல்லையற்ற அறிவுதான் என்பது நிச்சயம்.

பிரபஞ்சம் முழுவதும் நிறைந்த இந்த அறிவு, முதல் கருவில் ஒடுங்கிநின்று, பின்னர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு விரிவடைந்து இறுதியில், நிறை நிலை மனிதனாகப் பரிணமிக்கிறது.

பிறகு இந்த அறிவு, மூலகாரணத்திற்கு உள்ளேயே மறுபடியும் ஒடுங்கி விடுகிறது.

அதனால்தான் எல்லா சாஸ்திரங்களும், நாம் வாழ்வது, இயங்குவது, இருப்பது எல்லாம் அவருள்தான் என்று சொல்கின்றன.

நாம் ப்ரஹ்மத்திடமிருந்து வந்தோம், ப்ரஹ்மத்திடமே திரும்பிச் செல்கிறோம் என்று எல்லா சாஸ்திரங்களும் சொல்கின்றன.

ஆகவே, தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு, இதுப்போன்ற ஆய்வுகளில் நாம் ஈடுபடும்போது, இந்த பிரபஞ்சம் முழுவதிலும் நிறைந்திருக்கும் இந்த அறிவையே தத்துவவாதிகள் ஆன்மா அல்லது **ப்ரஹ்மம்** என்று கூறுகிறார்கள்.

ப்ரஹ்மம் என்று அந்தப் பழைய வார்த்தையை ஏன் பயன்படுத்துகிறீர்றீகள்? என்று கேட்டால், அந்த ஒற்றை வார்த்தைதான் நம் உயரிய நோக்கத்திற்கு மிகவும் வசதியாக இருக்கிறது. அதைவிடச்சிறந்த வார்த்தை நமக்குக் கிடைக்காது. காரணம், மனித குலத்தின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, ஆனந்தம் எல்லாமே அந்த ஒற்றை வார்த்தையில் அடங்கியிருக்கின்றன.

இப்போது, அந்த வார்த்தையை மாற்றுவது முடியாத காரியம்.

இதுப்போன்ற வார்த்தைகளை உண்டாக்கியவர்கள் பெரிய மகான்கள்.

அவர்கள் இத்தகைய வார்த்தைகளின் சக்தியையும், பொருளையும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால் சமுதாயத்தில் இந்த வார்த்தைகள் பழக்கத்திற்கு வந்தபோது மூடர்களும் இதைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

இதன் விளைவாக அவை தங்கள் உண்மைப் பொருளையும் மகிமையையும் இழந்துவிட்டன.

ப்ரஹ்மம் என்ற வார்த்தை, நினைவுக்கெட்டாத காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்து வருகிறது.

பிரபஞ்சப் பேரறிவு, புனிதம், உன்னதம் போன்ற வார்த்தைகளால் குறிக்கப்படுகின்ற அனைத்துமே இந்த வார்த்தையில் அடங்கியிருக்கின்றன.

யாரோ ஒரு முட்டாள் இந்த வார்த்தை சரியில்லை என்று சொன்னதற்காக அதைத் தூக்கி எறிந்துவிட வேண்டுமா என்றால் தேவையில்லை.

ஒருவன் வந்து, நான் சொல்லும் வார்த்தையைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று சொல்லலாம். மற்றொருவன் வந்து, நான் சொல்வதைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று சொல்லலாம்.

ஆகவே, முட்டாள்தனமான வார்த்தைகளுக்கு முடிவே இருக்காது.

ஆகவே, பழைய வார்த்தையையே நாம் பயன் படுத்துவோம். ஆனால், அதை அதனுடைய உண்மையான பொருளில் உணர்ந்துக் கொண்டு பயன்படுத்த வேண்டும். மேலும், அதைச் சார்ந்துள்ள மூடநம்பிக்கைகளை அகற்ற வேண்டும்.

அத்துடன் இந்தப்பழம்பெரும் வார்த்தையின் உண்மைப் பொருளையும் உணர வேண்டும். தொடர்பு விதியைப்பற்றி அறிந்திருந்தால், மிகவும் வலிமை வாய்ந்த, உன்னதமான பல கருத்துக்களோடு இந்த வார்த்தை இணைந்திருப்பதை நாம் உணரலாம்.

பலகோடி மக்கள் இத்தகைய வார்த்தைகளைப் பயபக்தியோடு பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். மிகவும் உன்னதமான, சிறந்த, அறிவுபூர்வமான, அன்புக்கு இலக்கான,

இயற்கையிலேயே மிகவும் மேலான கருத்துக்களுடன் அந்த கடவுள் என்ற வார்த்தை இணைந்திருக்கின்றன.

இந்த வார்த்தைகள் அந்தக்கருத்துக்களை நினைவூட்டு வனவாக இருப்பதால், அவற்றைக் கைவிட முடியாது.

ப்ரஹ்மம் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று மட்டுமே கூறி இந்தக் கருத்துக்களையெல்லாம் விளக்குவதற்கு முயன்றிருந்தால், உங்களுக்கு நான் கூறவருகின்ற உண்மைத்தன்மை விளங்கியே இருக்காது.

ஆனாலும், இந்த எல்லா போராட்டங்களுக்கும் பிறகு, அந்தப் புராதனப் பரம்பொருளை மறுபடியும் நாம் வந்து அடைந்துவிட்டோம்.

ஜடப்பொருள், எண்ணம், சக்தி, அறிவு மற்றும் பிரபஞ்சம் முழுவதும் நிறைந்துள்ள பல்வேறு சக்திகளும் பிரபஞ்சப் பேரறிவின் வெளிப்பாடுகளே.

இனிமேல், நாம் அந்தப் பேரறிவுப் பொருளை ஈஸ்வரன் என்று குறிப்பிடுவோம்.

நாம் பார்க்கின்ற கேட்கின்ற உணர்கின்ற எல்லாம், ஏன், பிரபஞ்சம் முழுவதும் அவருடைய படைப்பே.

இன்னும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், அவரது வெளிப்பாடே.

மேலும் சரியாகச் சொல்ல வேண்டுமானால், அவரே.

சூரியனாக நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பதும், இந்த பூமியாக இருப்பதும் அவரே. சமுத்திரம் அவரே. மென்மையான மழைத்தூறல் அவரே. நாம் சுவாசிக்கும் காற்று அவரே. நம் உடலில் சக்தியாக இயங்குவது அவரே. பேச்சு, பேசும் மனிதன் எல்லாம் அவரே.

இங்கே இருப்பதெல்லாம் அவரே. ஆம்! இருப்பதெல்லாம் இறைவனே!

அதாவது, இந்தப்பிரபஞ்சத்தின் நிமித்த காரணமும், உபாதான காரணமும் அவரே.

மிகச் சிறிய முதல் உயிரணுவுக்குள் ஒடுங்கி நின்று, பிறகு விரிந்து, கடைசியில் கடவுளாக வெளிப்படுவதும் அவரே.

மிகச் சிறிய, தாழ்ந்த நிலையிலிருக்கும் அணுவாக ஒடுங்கி, பிறகு விரிந்து, தன்னையே போய் அடைவதும் அவரே.

பிரபஞ்சத்தின் ரகசியம் இதுவே.

மனித அறிவைத் திருப்தி செய்கின்ற பிரபஞ்சத்தைப் பற்றிய கருத்து இது ஒன்று மட்டும்தான்.

அதாவது, ஒரே வார்த்தையில் சொல்லப்போனால், நாம் அவரிலிருந்தே தோன்றினோம். அவரிலேயே வாழ்கிறோம், அவரிடமே திரும்புவோம். ஆக, நாமும், அவரும் பிரிக்க முடியாத இந்த பிரபஞ்சம் என்பதை அறியும்போது, நம் பிறப்பின் நோக்கம் நிறைவாகி இருப்பதையும் நம்மால் உணர முடியும்.

ஓம் தத் ஸத்!

# பிரம்ம புராணம்



கண்களுக்குப் புலப்படாத மிகவும் நுட்பமான உருவில் இருந்த பிரபஞ்சத்திலிருந்துதான் கண்களுக்குப் புலனாகும் இந்தப் தூலப் பிரபஞ்சம் முழுவதுமே தோன்றி இருக்கிறது.

அது இப்போது வெளிப்பட்டிருக்கிறது.

பின்னர் தன்னுடைய நுட்பமான உருவத்திற்குத் திரும்பிச் சென்றுவிடும்.

மறுபடியும் வெளிப்படும்.